# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 தை 11 வெள்ளிக்கிழமை 24.01.2025 கதிர் 106










# "யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம்" பெயர் மாற்றியதால் உருவான சர்ச்சைக்கு முடிவு

யாழ்ப்பாணம் , ஜன 24

இந்திய அரசாங்கத்தினால் யாழ்ப்பாண மக்களுக்கென உவந்தளிக்கப்பட்ட கட்டடத் தொகுதியின் பெயர் இன்று காலை மீண்டும் மாற்றப்பட்டுள்ளது. "யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையம்" என்று வழங்கப்பட்டு, கடந்த 18 ஆம் திகதி முதல் "திருவள்ளுவர் கலாசார மையம்" எனப் பெயர் மாற்றப்பட்ட இந்திய அரசாங்க நன்கொடையான கட்டடத் தொகுதி இன்று மீண்டும் "யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. 7 ➤

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல்

### நீக்கப்பட்ட தனது பாதுகாப்புப் படையினரை மீளவும் பணியில் அமர்த்த உத்தரவிடக் கோரி



கொழும்பு, ஜன. 24

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நீக்கப்பட்ட தனது பாதுகாப்புப் படைகளை மீண்டும் பணியில் அமர்த்த உத்தரவிடக் கோரி 7 ➤

## யாழ். பல்கலை மாணவர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜன24

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் 9 பேருக்கு விதிக்கப்பட்டுள்ள வகுப்புத் தடைகளை நீக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து மாணவ ஒன்றியப் பிரதிநிதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பல்கலைக்கழக முன்றலில் இன்று வெள்ளிக்கிழமை முதல் 7 ➤

## வவுனியாவில் ஒருவர் வெட்டிப் படுகொலை

### தாயார் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியமைக்கு மகன் பழிவாங்கல்



வவுனியா, ஜன. 24

தாயார் மீது துப்பாக்கிச்சூடு நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரை மகன் வெட்டிப் படுகொலை செய்துள்ளார்.

வவுனியா, சுந்தரபுரத்தில் நேற்று இரவு அப்பகுதியைச் 7 ➤

## மண்வெட்டியால் வெட்டி அண்ணனை கொடூரமாகக் கொலை செய்த தம்பி!

### தென்னிலங்கையில் பயங்கரம்

கொழும்பு, ஜன. 24

சகோதரர்களுக்கிடையிலான மோதலில் குடும்பஸ்தர் ஒருவர் மண்வெட்டியால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் காலி மாவட்டம், கரந்தெனிய பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

காணி விற்பனை தொடர்பில் அண்ணனுக்கும் இரண்டு தம்பிகளுக்கும் 7 ➤



# ஒரேயொரு எம்.பிக்கே வாகனம் வழங்கினோம்

கொழும்பு, ஜன 24

10 ஆவது பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக வாகனங்கள் வழங்கபபடவில்லை என்றும், ஆனால் பார்வையற்ற எம்.பியான சுகத் வசந்த டி சில்வாவுக்கு மாத்திரம் ஜனாதிபதி செயலகம் ஊடாக வாகனமொன்று வழங்கப்பட்டுள்ளது. என்றும் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

இதேவேளை அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களுக்கு வாகனங்கள் அவசியமாக உள்ளது என்றும், செலவுகளை குறைத்து வாகனங்களை பயன்படுத்துவதில் எந்த பிரச்சினைகளும் தமக்கு கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் இதனை கூறினார்.

ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்றும், அவை எந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள என்றும் சாமர சம்பத் கேள்வியெழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் கூறுகையில்,

10ஆவது பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக வாகனங்கள் வழங்கப்படவில்லை. ஆனால் பார்வையற்ற எம்.பியான சுகத்



வசந்த டி சில்வாவுக்கு மாத்திரம் ஜனாதிபதி செயலகம் ஊடாக வாகனமொன்று வழங்கப்பட்டுள்ளது. அவர் பார்வையற்ற பாராளுமற்ற உறுப்பினர் என்ற காரணத்தினால் அவருக்கு உதவும் வகையில் இது வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இதன்போது மேலதிக கேள்விகளை எழுப்பி உரையாற்றிய சாமர சம்பத் எம்.பி கூறுகையில், பிரதமர் இவ்வாறு கூறினாலும் மாதிவெலவில் வாகனமொன்று உள்ளது. நீங்கள் பிரதமராக கூறும் கருத்துக்களை ஏற்றுக்கொண்டாலும் ரேஞ்ச் ரோவர் வாகனமொன்று பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் உளளது. வீ8 வாகனத்தை விடவும் ரேஞ்ச் ரோவருக்கு செலவு அதிகமாகும். அவரின் பெயரை வேண்டுமென்றால் கூறுகின்றேன். அவர் வசந்த சமரசிங்கவே.

அத்துடன் எனது மேலதிக கேள்வியாக ஒரு விடயத்தை கேட்கின்றேன். பிஎச் 1208 என்ற இலக்கமுடைய வாகனமொன்று சுற்றுலாத்துறை அமைச்சின் செய லாளரின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது உங்களின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் இருக்கின்றது. அவரின் பெயரை கூறப் போவதில்லை.

பண்டாரவளை பூனாகலை தோட்டத்தில் புல் கட்டுகளை ஏற்றிச் செல்கின்றது. இது தொடர்பான விடயத்தை சபையில் சமர்ப்பிக்கின்றேன். பசறை ஒருங்கிணைப்பு குழுவுக்கு குறித்த வாகனம் வந்துள்ளது. லுனுகல ஒருங்கிணைப்பு குழுவுக்கும் மற்றும் மாவட்ட கூட்டத்திற்கும் வந்துள்ளது. பதுளை மாவட்டத்திலேயே குறித்த எம்.பியினால் அந்த வாகனம் பயன்படுத்தப்படுகின்றது. இதில் புல்லு கட்டுகளை ஏற்றுகின்றனர். இது அரசாங்கத்திற்கு சரியில்லை. இப்படி இருக்கையில் நீங்கள் வாகனங்கள் வழங்கப்படுவதில்லை என்று தெரிவிக்கின்றீர்கள்.

இதன்போது பதிலளித்த பிரதமர் ஹரினி அமரசூரிய, அதனை எனக்கு அனுப்புங்கள் தேடிப்பார்கின்றேன். உங்களுக்கு அல்ல எமது கட்சியில் ஒழுக்கத்தை கொண்டு செல்ல வேண்டும். அதனால் அதனை தாருங்கள் தேடிப்பார்க்கின்றேன் என்றார். (ஐ)

# வெட்கம் இருந்தால் வெளியேற வேண்டும்

கொழும்பு, ஜன 24

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வெட்கம் என்பதொன்று இருக்குமானால் அரச இல்லங்களிலிருந்து வெளியேற வேண்டும். ஆனால் இவர்களுக்கும் வெட்கமில்லை, இவர்களின் பிள்ளைகளுக்கும் வெட்கமில்லை எனத்தெரிவித்த சுகாதாரத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வசிக்கும் பௌத்தாலோக்க மாவத்தை வீடு 3128 மில்லியன் ரூபாயட பெறுமதியானது. 46 இலட்சம் ரூபா மாத வாடகை கொண்டதெனவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை இடம் பெற்ற பல கட்டளைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் பாரியார் ஆகியோரை பராமரிக்கும் பொறுப்பில் இருந்து நாட்டு மக்களை விடுத்துள்ளோம். முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவுக்கு கொழும்பு -05 பகுதியில் வீடு ஒன்று ஒதுக்கப்பட்டது. இந்த வீட்டின் நடைமுறை சந்தை பெறுமதி 2598.5 மில்லியன் ரூபா .நடைமுறை மாத வாடகை கட்டணம் 1,275,000 ரூபாய் இந்த வீட்டில் இருந்து கோத்தபாய ராஜபக்ஷ வெளியேறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க கொழும்பு -07 பெஜ்ஜட் பகுதியில் வழங்கப்பட்டிருந்த வீடு 3,132 மில்லியன் ரூபாய் பெறுமதியானது. இதன் நடைமுறை சந்தை மாத வாடகை கட்டணம் 29 இலட்சம் ரூபா .இந்த வீட்டில் இருந்து ரணில் விகக்கிரமசிங்கவும் வெளியேறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் பாரியாரான ஹேமா பிரேமதாச கொழும்பு 07 இல் உள்ள அரசாங்கத்துக்கு சொந்தமான வீட்டில் வசித்தார். தற்போது அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கொழும்பு -07 பகுதியில் 1005.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான வீடு வழங்கப்பட்டது. இவர் இன்றும் இந்த வீட்டில் தான் வசிக்கிறார்.அந்த வீட்டின் நடைமுறை சந்தை மாத வாடகை 9 இலட்சம் ரூபாயாகும் .

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வசிக்கும் பௌத்தாலோக்க மாவத்தை வீடு தொடர்பில் குறிப்பிட்டதன் பின்னர் ' மஹிந்தவின் வீட்டை பாதுகாப்போம் 'என்று அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது.இந்த வீடு 1 ஏக்கர் 13.8 பேர்ச்சஸ் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 3128 மில்லியன் ரூபாய பெறுமதியானது. 46 இலட்சம் ரூபா மாத வாடகை பெறுமதியானது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க வசிக்கும் வீட்டின் பெறுமதி மதிப்பிடப்படவில்லை. அவர் நாடு திரும்பியதும் வீட்டை மதிப்பிடுமாறு குறிப்பிட்டுள்ளார். ஆகவே வெகுவிரைவில் அந்த வீட்டின் பெறுமதி தொடர்பான விபரங்கள் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்படும்.

முன்னாள் ஜனாதிபதிகள் வசிக்கும் வீடுகளை பராமரிப்பதற்கும், பாதுகாப்பு வழங்குவதற்கும் மக்களின் வரிப்பணமே பயன்படுத்தப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வசிக்கும் வீட்டுக்கு பெருமளவிலான நிதி செலவிடப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு 33 இலட்சம் ரூபா, 2022 ஆம் ஆண்டு 3, 45000 ரூபா, 2023 ஆம் ஆண்டு 18.மில்லியன் ரூபா, 2024 ஆம் ஆண்டு 9 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பௌத்தாலோக்க மாவத்தையில் உள்ள அரச இல்லத்தில் வசித்துள்ளார்.இக்காலப்பகுதியில் மாத்திரம் அந்த வீட்டை பராமரிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் 430 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் ஏன் முன்னாள் ஜனாதிபதிகளையும்,அவர்களின் குடும்பத்தா ரையும் பராமரிப்பற்கு பணம் செலவழிக்க வேண்டும்?வெட்கம் என்பதொன்று இருக்குமானால் இவர்கள் இந்த வீடுகளை விட்டு வெளியேற வேண்டும். வீடுகளில் இருப்பவர்களுக்கும் வெட்கமில்லை, அவர்களின் பிள்ளைகளுக்கும் வெட்கமில்லை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மூன்று பிள்ளைகள் உள்ளார்கள். ஒருவர் கடற்படையில் இருந்ததாகவும், பிறிதொருவர் விஞ்ஞானி என்றும் குறிப்பிடப்படுகிறது. பெற்றோரை பார்த்துக் கொள்ளும் பொறுப்பு பிள்ளைகளுக்கு உண்டு. ஆகவே முன்னாள் ஜனாதிபதிகளை அவர்களின் பிள்ளைகள் கவனித்துக் கொள்ள வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, சந்திரிக்கா பண்டாரநாயக்க மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அரச இல்லங்களை விட்டு வெளியேற வேண்டுமென பிரத்தியேகமாக குறிப்பிடத் தேவையில்லை. வெட்கம் என்பதொன்று இருக்குமானால் இவர்கள் வெளியேற வேண்டும் என்றார். (ஐ)



# பழங்குடியினருக்கு 3 மாதங்களில் தீர்வு

கொழும்பு, ஜன 24

பழங்குடியின மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற சட்ட வரைவின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும், பழங்குடியின மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பான தற்போதைய சட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் சுற்றாடல் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடல் (22) பாராளுமன்ற வளாகத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு வேடுவ இன மக்களின் வரலாற்றுப் பெறுமதியைப் பற்றி விளக்கிய பழங்குடியின தலைவர் ஊருவரிகே வன்னியஎத்தா, அவர்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வந்தார். ஐக்கிய நாடுகள் சாசனத்தின்படி தயாரிக்கப்பட்ட பழங்குடியின உரிமைச் சட்டம் மற்றும் பழங்குடியினர் அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் குறித்து விளக்கிய பழங்குடியின தலைவர், கடந்த அரசுகள் சில நடவடிக்கைகளை எடுத்தாலும், தமது பிரச்சனைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கவில்லை என சுட்டிக்காட்டினார்.

வேடுவ இன மக்கள் நாட்டின் வரலாற்றுச் சொத்து என்றும், அவர்களைப் பாதுகாப்பதும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் இன்றியமையாதது என்றும் கலாசார அமைச்சர் சுனில் செனவி தெரிவித்தார்.

பழங்குடியின மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை சுற்றாடல் அமைச்சு துரிதமாக முன்னெடுக்கும் என சுற்றாடல் அமைச்சர் தம்மிக்க படபெந்தி தெரிவித்தார்.

அது தொடர்வில் நடைமுறையில் உள்ள சட்ட நிலைமைகள் மற்றும் அதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து சுற்றாடல் அமைச்சு மற்றும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் விளக்கினர்.

பழங்குடியினர் எமது நாட்டின் ஒரு அங்கம் எனவும், ஏனைய அனைவருக்கும் இருக்கும் உரிமைகள் பழங்குடியினருக்கும் இருக்க வேண்டும் எனவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இங்கு தெரிவித்தார். பழங்குடியின மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு நடைமுறையில் உள்ள சட்ட மற்றும் தொழில்நுட்ப சிக்கல்கள் குறித்து கவனம் செலுத்திய பிரதமர், அடுத்த மூன்று மாதங்களில் பழங்குடியினரின் உரிமைகளை வென்றெடுக்க தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளிடம் கூறினார்.

இந்த நிகழ்வில் சுற்றாடல் அமைச்சர் தம்மிக்க படபெந்தி, கலாசார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, சுற்றாடல் பிரதி அமைச்சர் அன்டன் ஜயக்கொடி, பாராளுமன்ற உறுப்பினர் சுகத் பலகல்ல, வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகம் சூரியபண்டார ஆகியோர் உட்பட சுற்றாடல் அமைச்சு மற்றும் மாற்றுக் கொள்கை மையத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் மற்றும் பழங்குடியின மக்கள் கலந்து கொண்டனர். (ஐ)

# படுகொலை என்கிறார் சிறீதரன்; தற்கொலை என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஜன 24

மருதானை பொலிஸ் நிலையத்தில் வவுனியா பெண் தற்கொலை செய்யவில்லை, கொலை செய்யப்பட்டுள்ளார் என தமிழரசுக்கட்சியின் யாழ். மாவட்ட எம்.பி. யான சிறீதரன் தெரிவித்தார்.எனினும் இது தற்கொலை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பதிலளித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (23) விசேட கூற்றை முன்வைத்த சிறீதரன் எம்.பி. அந்த யுவதி கொலைச்செய்யப்பட்டுள்ளார் என்றார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

மருதானை பொலிஸ் நிலையத்தில் வவுனியாவை சேர்ந்த பெண் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. ஆனால், அவர் தற்கொலை செய்யவில்லை . பொலிஸ் நிலையத்திற்குள் அவர் எவ்வாறு தற்கொலை செய்து கொள்ள முடியும்? அவர் கொலை செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட ஒரு கைதியான அவர் எவ்வாறு மரணத்தை தழுவ முடியும்?

இது ஒரு பயங்கரமான செய்தி. எனவே இது தொடர பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால,நீதியைப்பெற்றுத்தர வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, நீங்கள் முன்வைத்துள்ள இந்த விடயம் தொடர்பில் இன்றைய தினத்துக்குள் ஆராய்ந்து உங்களுக்கு பதில் வழங்குவேன் என்றார்.

பின்னர் இதற்கு பதில் வழங்கிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால,

வவுனியாவை சேர்ந்த குறித்த பெண் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்று பிரேத பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்தப் பெண் ஐந்து வழக்குகளில் பிரதிவாதியாக இருந்து பிடியாணையில் கடந்த 21ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

புதன்கிழமை (22) துரதிஸ்டமான சம்பவம் நடந்துள்ளது. பிரேத பரிசோதனை வியாழக்கிழமை (23) நடைபெற்றது. அதில் அவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்பது உறுதியாகியுள்ளது என்றார்.

## ஒழுக்கமின்மை கலாசாரம் அதிகரித்துச் செல்கிறது



கொழும்பு, ஜன 24

எமது மக்களிடையே இவ்வாறான ஒழுக்கமின்மை கலாசாரம் அதிகரித்துச் செல்வதாக வேதனை வெளியிட்ட வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், 1970 - 1980 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் யாழ்ப்பாண நகரமே இலங்கையில் தூய்மையான நகரமாக அடையாளப்பட்டிருந்ததை நினைவுகூர்ந்தார். இது எங்களின் நகரம். நாங்கள் வாழும் நகரம். வாழப்போகும் நகரம் என்பதை ஒவ்வொருவரும் மனதிலி ருத்திச் செயற்பட வேண்டும் என வலியுறுத்திய, அவர் 'தூய்மையான இலங்கை' செயற்றிட்டத்தின் கீழ் 'நகரைத் துப்புரவு செய்தல்' வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு அப்பால் நகரை அதே நிலையில் பேணுவதே முக்கியம் எனக் குறிப்பிட்டார்.

'தூய்மையான இலங்கை' செயற்றிட்டம் முன்னெடுப்புத் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

'தூய்மையான இலங்கை' செயற்றிட்டத்தின் கீழ், எதிர்வரும் 03.02.2025 அன்று யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் நல்லூர் பிரதேச சபையால் அடையாளப்படுத் தப்பட்டுள்ள இடங்களில் பாதுகாப்புத் தரப்பினர், பாடசாலை மாணவர்கள், திணைக்களப் பணியாளர்கள், பொது மக்கள் பங்கேற்புடன் துப்புரவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இது தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

கடந்த காலங்களிலும் பல தடவைகள் நகரைச் சுத்தம் செய்தல், கடற்கரையோரங்களைச் சுத்தம் செய்தல் ஆகிய செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர், துப்புரவு செய்த மறுநாளே குப்பைகளை அந்த இடங்களில் பொதுமக்கள் கொட்டுவதால் சுத்தம் செய்ததன் நோக்கம் நிறைவடையாத சந்தர்ப்பங்களே அதிகம் எனத் தெரிவித்தார்.

இம்முறை அவ்வாறான நிலைமை ஏற்படக் கூடாது என ஆளுநர் குறிப்பிட்டார். (ஐ)

## இயல்பு வாழ்க்கை பாதிப்பு









கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது

## யார் கூறுவது பொய்'

கொழும்பு, ஜன 24

நெல் தொடர்பில் அதிகாரிகள் கூறுவது பொய்யா அல்லது வர்த்தகர்கள் கூறுவது பொய்யா என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். நெல் உற்பத்தி தொடர்பான தரவுகள் பிழையாக இருந்தால் தீர்மானங்களும் தவறானதாக அமையும் என அரசாங்க நிதி தொடர்பான குழுவின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.யுமான கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(23) அரசாங்க நிதி தொடர்பான குழுவின் அறிக்கையை சபைக்கு சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

விவசாயத்துறை அமைச்சு மற்றும் விவசாயத்துறை திணைக்களத்தின் அதிகாரிகளை அண்மையில் அரசாங்க நிதி தொடர்பான குழுவுக்கு அழைத்தோம். 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட நெல் மற்றும் அரிசியின் மொத்த தொகை மற்றும், 2025 ஆம் ஆண்டு நெல் மற்றும் அரிசி உற்பத்தி தொகை எதிர்பார்ப்பு குறித்து கேள்வியெழுப்பினோம்.

2024 ஆம் ஆண்டு 1 மில்லியன் மெற்றிக்தொன் நெல் இல்லாமல் போயுள்ளது.அதனால் தான் தற்போது அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என விவசாயத்துறை அமைச்சு மற்றும் விவசாயத்துறை திணைக்களம் குறிப்பிட்டதை கேட்டு ஆச்சரியம் ஏற்பட்டது.

2024 ஆம் ஆண்டு பெரும்போக விவசாயத்தில் 4.39 மில்லியன் மெற்றிக்தொன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டதாக விவசாயத்துறை அமைச்சின் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள். அக்காலப்பகுதியில் 2.9 மில்லியன் மெற்றிக் தொன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டதாக நாங்கள் குறிப்பிட்டோம்.

2000 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட நெல் மற்றும் அரிசியின் மொத்த தொகை தொடர்பில் தரவுகளை கோரியுள்ளேன். அதிகாரிகள் பொய்யான தரவுகளை குறிப்பிடுகிறார்களா அல்லது வர்த்தகர்கள் பொய் குறிப்பிடுகிறார்களா என்பதை அறிந்துக் கொள்ள முடியும். தரவுகள் பொய்யாயின் தீர்மானங்களும் தவறானதாக அமையும். ஆகவே இவ்விடயம் குறித்து ஆராயுமாறு விவசாயத்துறை அமைச்சுக்கு பரிந்துரைக்கின்றோம் என்றார். (ஐ)

## தொற்றுநோய் அபாயம்



கொழும்பு, ஜன 24

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக தொற்று நோய் பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதால் பொது மக்கள் அவதானமாக செயற்படுமாறு, அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல் எம். றிபாஸ் வியாழக்கிழமை (23) தெரிவித்தார்.

வெள்ள நீர் சுகாதாரமற்று காணப்படுவதால் இந்த நீரில் நடமாடுவதை தவிர்க்குமாறும், இதனால் பாரிய தொற்று நோய் ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

சிறுவர்களுக்கு இந் நீர் மூலம் வயிற்றோட்டம் மற்றும் தோல் நோய் என்பன ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படக்கூடும், சகலரும் கொதித்தாறிய நீரை பருக வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

பெற்றோர்கள் நீர் நிலைகளில் பிள்ளைகளை நீராடச் செல்ல விடாது தடுக்க வேண்டும். வெள்ளப் பெருக்கினால் உயிர் ஆபத்து ஏற்படக் கூடிய வாய்ப்புகள் அதிகமாக காணப்படுவதால் அவதானமாக இருக்க வேண்டும். என்றும் கேட்டுள்ளார்.

இடைத்தங்கல் முகாம்களில் மற்றும் உறவினர்கள் வீடுகளில் தங்கி உள்ளவர்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரிகளினால் ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இக்காலத்தில் நோய் தொற்றுக்கு உள்ளாவோர் உடனடியாக அரசாங்க வைத்தியசாலைக்கு செல்லுமாறு கேட்டுள்ளார். கர்ப்பிணித் தாய்மார்கள் வெள்ள நீரில் நடமாடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவித்துள்ளார்.

வெள்ள அனர்த்த நிலமைகளின் போது அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் வானிலை அவதான நிலையம் ஆகியவற்றால் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றி நடக்குமாறு கேட்டுள்ளார். (ஐ)

# குடியரசு தினவிழாவில் பங்கேற்க டெல்லி வந்தடைந்தார் இந்தோனேசிய அதிபர்!



இந்திய குடியரசு தினவிழாவில் பங்கேற்ப்பதற்காக இந்தோனேசிய அதிபர் பிரபோவா சுபியாண்டோ நேற்று டெல்லி வந்தடைந்துள்ளார்.

76-வது குடியரசு தினவிழா வரும் 26-ஆம் திகதி நாடு முழு வதும் கொண் டாடப்படுகிறது. இதை முன்னிட்டு டெல்லியில் அணிவகுப்பு நிகழ்ச்சி நடைபெறும்.

ஒவ்வொரு குடியரசு தின அணிவகுப்பிலும் வெளிநாட்டைச் சேர்ந்த அதிபர் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொள்வார்.

அந்தவகையில் குடியரசு தின அணிவகுப்பில் இந்தோனேசிய அதிபர் பிரபோவா சுபியாண்டோ சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார் என மத்திய அரசு அறிவித்திருந்தது.

73 வயதான அவர் முன்னாள் இராணுவ தளபதி ஆவார். கடந்த அக்டோபர் மாதம் அவர் அதிபராக பொறுப்பேற்றார்.

இந்நிலையில், குடியரசு தின விழாவில் கலந்து கொள்வதற்காக இந்தோனேசிய அதிபர் பிரபோவா சுபியாண்டோ நேற்று இரவு டெல்லி வந்தடைந்தார். அவரை வெளியு றவுத்துறை இணை மந்திரி பபித்ரா மார்கிரெட்டா உற்சாகமாக வர வேற்றார்.

டெல்லி வந்துள்ள இந்தோனேசிய அதிபர் சுபியாண்டோ ஜனாதிபதி மற்றும் பிரதமர் மோடியைச் சந்தித்துப் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு நடைபெற்ற குடியரசு தினவிழா நிகழ்ச்சியில் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் பங்கேற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பா.ஜ.க. தனது உத்தரவாதத்தை ஒருபோதும் நிறைவேற்றாது – குஜராத் ஆம் ஆத்மி தலைவர்!




பா.ஜ.க. தனது உத்தரவாதத்தை ஒருபோதும் நிறைவேற்றாது என குஜராத் ஆம் ஆத்மி தலைவர் இசுதன் காத்வி கூறியுள்ளார்.

டெல்லி மாநில சட்டசபை தேர்தல் பிப்ரவரி 5ஆம் திகதி நடைபெற இருக்கிறது. மனுத்தாக்கல் முடிவடைந்த நிலையில் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ளது. ஆம் ஆத்மி, பா.ஜ.க., காங்கிரஸ் இடையே மும்முனை போட்டி நிலவுகிறது. அரவிந்த் கெஜ்ரிவால் சூறாவளி பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில் டெல்லியில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த குஜராத் மாநில ஆம் ஆத்மி தலைவர் இசுதன் காத்வி கூறுகையில்,

டெல்லி மக்களின் இதயங்களில் அரவிந்த் கெஜ்ரிவால் இருக்கிறார். இப்போது குஜராத் மக்களின் இதயங்களிலும் அரவிந்த் ஜி இருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவர் டெல்லியில் மக்களுக்காக ஏராளமான பணிகளை செய்துள்ளார். அரவிந்த் கெஜ்ரிவால் தனது உத்தரவாதத்தை நிறைவேற்றும் தலைவர். பா.ஜ.க. தனது உத்தரவாதத்தை ஒருபோதும் நிறைவேற்றாது என்று தெரிவித்துள்ளார்.

# உபேர், ஓலா நிறுவனங்களுக்கு நோட்டீஸ் அளித்த மத்திய அரசு!




டாக்சி ஒருங்கிணைப்பாளர்களாக இருக்கும் உபேர் மற்றும் ஓலா நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு போக்குவரத்து சேவை வழங்கி வருகிறது.

இந்தச் சேவையை பயன்படுத்தி வரும் வாடிக் கையாளர்கள் தங்களின் ஐபோன் அல்லது ஆண்ட்ராய்டு ஸ்மார்ட் போன்களுக்கு வெவ்வேறு கட்டணங்கள் வசூலிக்கப்படுவதாக புகார்கள் வெளியாகின.

இந்தப் புகார்கள் குறித்து மத்திய அரசின் கவனத்திற்கு வந்தது. இதனையடுத்து மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் நடவடிக்கை எடுத்தது.

இந்நிலையில், இது தொடர்பாக மத்திய நுகர வோர் விவகாரத்துறை மந்திரி பிரகலாத் ஜோஷி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், வாடிக்கையாளர்களின் ஐபோன் அல்லது ஆண்ட்ராய்டு ஸ்மார்ட் போன்களில் பதிவுசெய்வதில் வெவ்வேறு கட்டணங்கள் வசூலிக்கப்படுவதாக எழுந்த புகாரின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

அந்த நிறுவனங்களின் கட்டண அறிக்கைகள் தொடர்பாக உபேர், ஓலா நிறுவனங்களுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பி உள்ளோம் என பதிவிட்டுள்ளார்.



# மகன் இறந்த துக்கத்தில் ஆற்றில் குதித்து கணவன்–மனைவி தற்கொலை!

கேரளாவில் மகன் இறந்த துக்கத்தில் ஆற்றில் குதித்து கணவன்-மனைவி தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கேரள மாநிலம் திருவனந்தபுரம் பகுதியை சேர்ந்தவர் சினேகா தேவ். இவரது மனைவி ஸ்ரீலதா. இவர்களது ஒரே மகன் ஸ்ரீதேவ் கல்லூரியில் படித்துவந்த நிலையில், கடந்த ஆண்டு விபத்து ஒன்றில் சிக்கி பலியானார்.

தங்களுக்கு இருந்த ஒரே மகனின் மரணத்தை ஏற்றுக்கொள்ள முடியாத இருவரும் கவலையுடன் இருந்திருக்கின்றனர். மகன் இல்லாத உலகில் வாழ பிடிக்காத அவர்கள், தற்கொலை செய்துகொள்ள முடிவு செய்துள்ளனர்.

அதன்படி கணவன்-மனைவி இருவரும் திருவனந்தபுரம் நெய்யாற்றுக்கு சென்றனர். பின்பு அவர்கள் தங்களின் கைகளை ஒன்றாக கயிற்றால் சேர்த்து கட்டிக் கொண்டு ஆற்றில் குதித்தனர். இதையடுத்து அவர்கள் இருவரும் ஆற்றில் மூழ்கி பலியாகினர்.

தகவல் கிடைத்தையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இருவரின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருவனந்தபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

கணவன்-மனைவி பிணமாக கிடந்த இடத்தில் அவர்கள் எழுதிய உருக்கமான கடிதம் சிக்கியது. அதில் தங்களது மக னின் பிரிவை தாங்க முடியாமல் தற்கொலை முடிவை எடுத்திருப்பதாக எழுதியிருந்தனர். மேலும் சினேகா தேவின் உடலில் அவர்களது மகனின் பெல்ட்டும் கிடந்தது.

மகன் இறந்த துக்கம் தாங்காமல் ஆற்றில் குதித்து கணவன்-மனைவி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் திருவனந்தபுரத்தில் சோகத்தை ஏற்படுத்தியது.



# மூன்றாம் பாலினத் தடை!

## ட்ரம்பின் முதலாளித்துவ ஆணாதிக்க சிந்தனை

பாலின அடையாளம் (Gender Identity) என்ற சொல் முதன்முதலில் 1960 களில் தோன்றியது. ஆணாகவோ, அல்லது பெண்ணாகவோ சமூகத்தால் வகைப்படுத்தப்பட்ட நபர், தன் உள்ளுணர்வின் அடிப்படையில், தன்னை யாராகக் கருதுகிறார் என்ற அடிப்படையில் இந்த வார்த்தைப் பிரயோகம் கொண்டு வரப்பட்டது. காலப்போக்கில், இந்த சொல், பல்வேறு வகையில் தன்னை அடையாளம் காணும் நபர்களையும் சேர்த்துக்கொண்டு பயணிக்கிறது.

Sex - Gender என்ன வித்தியாசம் பற்றி, Women's Health Research நிறுவனரும், உளவியல் மருத்துவருமான கரோலின் எம். மஸூர் (Carolyn M. Mazure)> ``Sex (பால்) என்பதற்கும் புநனெநச (பாலினம்) என்பதற்கு வித்தியாசம் இருக்கிறது. ஆனால், பெரும்பாலானவர்கள் இரண்டுக்கும் ஒரே பொருள் என்றே கருதுகிறார்கள். உண்மை அதுவல்ல. ஒரு குழந்தை பிறக்கும் போது, அதன் உயிரியல் அடிப்படையில் அதை ஆணாகவோ, அல்லது பெண்ணாகவோ இந்த முடிவு செய்யப்படுகிறது. இதைக் குறிப்பிடும் இடத்தில் ளுநஒ என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

Gender என்ற வார்த்தை அந்தக் குழந்தை வளர்ந்து வரும்போது, அவர் தன்னை என்னவாக உணர்கிறார் என்பதைப் பொறுத்து புநனெநச தீர்மானிக்கப்படுகிறது. அப போதுதான் தன்னுடைய விருப்ப புநனெநச-ஐ உடை, நடை, பாவனைகள் மூலம் வெளிப்படுத்துவார்கள். அது சார்ந்துதான் அவர்களின் இணைத்தேர்வும் இருக்கும்." எனக் குறிப்பிடுகிறார்.

ஆய்வு முடிகளின் படி உடல் தேர்வு, இணைத் தேர்வு, உணர்ச்சிகள், விருப்பங்கள் என்ற அடிப்படையில் 70-கும் மேற்பட்ட புநனெநச-கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இத்தனை புநனெநச-கள் இருப்பதாகக் கூறப்படும் நிலையில், அமெரிக்காவில் இரண்டாம் முறை ஆட்சிப் பொறுப்பேற்ற அதிபர் டொனால்ட் ட்ரம்ப், தன்னுடைய முதல் அறிவிப்பாக, ஹஹஆண் -ழ பெண் என்ற இரு பாலினம் மட்டுமே இனி அங்கீகரிக்கப்படும்" என்ற உத்தரவில் கையெழுத்திட்டிருக்கிறார். இது பாலினம் சார்ந்து இயங்குபவர்களுக்கு பெரும் அதிர்ச்சியையும், அயற்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

"ட்ரம்ப்பின் இந்த முடிவுக்கு இரண்டு காரணங்கள் இருக்கிறது' என்கிறார் மருத்துவர் ஷாலினி. இது குறித்து பேசும் அவர், "நாம் குழந்தையாக இருக்கும் போது ஆண் - பெண் என்ற இரண்டு புநனெநச மட்டும் தான் நமக்குத் தெரியும். ஆனால், நம் வளர்ச்சியில் நமக்குள் நிகழும் மாற்றங்கள் புரிய ஆரம்பிக்கும். 16 - 17 வயதில் இருக்கும் ஒரு சிறுவன் நகபொலிஷ் வைத்தால் நன்றாக இருக்கும் என விரும்பலாம். ஆனால் அப்போதே அவனுக்குள் 'நான் பெண் போல ஆசைப்படுகிறேனே...' என்ற சந்தேகம் எழலாம். ஆனால், வயதுக்கு வந்த பிறகு நான் ஆண் என அவரே உணர்வார். அவர் அப்படி உணராதபட்சத்தில் அது மூன்றாம் பாலினமாக அடையாளப்படுத்தப்படும். இதேதான் பெண்ணுக்கும். ஆனால், ட்ரம்ப் என்னால் பல பாலினங்களையெல்லாம் பட்டியலிட முடியாது. ஆண் - பெண் என்ற இரண்டு பாலினங்களை மட்டும்தான் அனுமதிப்பேன் என்கிறார்.

அவரின் இந்த முடிவுக்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று, ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் 'என்னுடைய பாலினம் எனக்குப் பிடிக்கவில்லை, வேறு பாலினத்துக்கு மாறுகிறேன்' எனப் பலர் இன்ஸ்டாகிராம் போன்ற வலைத்தளங்களில் பதிவிடுகிறார்கள். சிறுவர் - சிறுமிகள் கூட பாலின மாற்று அறுவை சிகிச்சை செய்து கொள்கிறார்கள். ஊடகங்கள் இது தொடர்பாகத் தொடர்ந்து பேசிவந்ததால், கடந்த 5 ஆண்டுகளாக 'அவசரப்பட்டு பாலின மாற்று அறுவை சிகிச்சை செய்துகொள்ள வேண்டாம்' என்ற விவாதங்களும் எழுந்தது.






"ட்ரம்ப்பின் இந்த முடிவுக்கு இரண்டு காரணங்கள் இருக்கிறது' என்கிறார் மருத்துவர் ஷாலினி. இது குறித்து பேசும் அவர், "நாம் குழந்தையாக இருக்கும் போது ஆண் – பெண் என்ற இரண்டு புநனெநச மட்டும் தான் நமக்குத் தெரியும். ஆனால், நம் வளர்ச்சியில் நமக்குள் நிகழும் மாற்றங்கள் புரிய ஆரம்பிக்கும். 16 – 17 வயதில் இருக்கும் ஒரு சிறுவன் நகபொலிஷ் வைத்தால் நன்றாக இருக்கும் என விரும்பலாம். ஆனால் அப்போதே அவனுக்குள் 'நான் பெண் போல ஆசைப்படுகிறேனே...' என்ற சந்தேகம் எழலாம். ஆனால், வயதுக்கு வந்த பிறகு நான் ஆண் என அவரே உணர்வார். அவர் அப்படி உணராதபட்சத்தில் அது மூன்றாம் பாலினமாக அடையாளப்படுத்தப்படும். இதே தான் பெண்ணுக்கும். ஆனால், ட்ரம்ப் என்னால் பல பாலினங்களையெல்லாம் பட்டியலிட முடியாது. ஆண் – பெண் என்ற இரண்டு பாலினங்களை மட்டும்தான் அனுமதிப்பேன் என்கிறார்.

இன்னொன்று, கடவுள் நம்பிக்கை இருக்கும் ட்ரம்ப், கடவுள் படைப்பில் ஆண், பெண் மட்டும்தான் என உறுதியாக நம்புகிறார்.

அதுதவிர அறுவை சிகிச்சை செய்வதாக இருந்தால் அரசு செலவு, இன்சூரன்ஸ் பணம் என்பது போன்ற திட்டங்கள் அமெரிக்காவில் இருக்கிறது. எனவே, 'பாலின மாற்று அறுவை சிகிச்சைக்கு அரசு ஏன் செலவழிக்க வேண்டும்' என அவர் நினைக்கிறார். ஆனால், இந்த தடையின் பின்விளைவுகளை அமெரிக்கர்களே இன்னும் ஐந்து ஆண்டுகளில் புரிந்துகொள்வார்கள்.

ஏற்கெனவே தன்னை வேறு பாலினமாக அறிவித்துக்கொண்டவர்களுக்கு இனி சட்டச் சிக்கல்கள் ஏற்படும். அமெரிக்கா முன்னேறிய நாடாக இருந்தாலும் நிறம் போன்ற பிற்போக்கு சிந்தனைச் சிக்கல் இருக்கிறது தானே... அதுபோல இனி மூன்றாம் பாலினத்தவர்களுக்கும் அச்சுறுத்தல் இருக்கும். இந்தியா எப்போதும் பன்மைத்துவம் வாய்ந்த நாடு.

ஆழ்வார்களில் மாணிக்க வாசகர் ஹோமோ செக்ஸை குறிப்பிட்டு பாடல் பாடியிருக்கிறார். அதுகுறித்து நாம் குறை கூறவே இல்லை. அதை அப்படியே ஏற்று, பக்தி இலக்கியத்தில் வைத்திருக்கிறோம். எனவே இந்தியா இதை மாற்றிக்கொள்ளாது" என்றார்.

"மூன்றாம் பாலினத் தடை என்பது முதலாளித்துவ ஆணாதிக்க சிந் தனை" என்கிறார் சமூக செயற்பாட்டாளர் கிரேஸ் பானு. ஹஹமுதலாளித்துவ, ஆணாதிக்க சமூகம் பல வருடமாக எங்களை நோக்கிக் கல்வீசிக்கொண்டேதான் இருக்கிறது. அதை எதிர்த்துக் களமாடிக்கொண்டிருக்கிறோம். அதன் பலனாகப் பல மாற்றங்களையும் சமூகத்தில் நிகழ்த்திக்கொண்டிருக்கி றோம். முதலாளித்துவ நாட்டிடமிருந்து வேறு எதை எதிர்பார்க்க முடியும்... நிச்சயம் அவர்களிடம் ஜனநா யகம் இருக்காது, கிடைக்காது. அதிலும் குறிப்பாக ட்ரம்ப்பிடமிருந்து ஜனநாயக சிந்தனையா????. பொறுப்புக்கு வந்தவுடன் உலக சுகாதார அமைப்பிலிருந்து வெளியானது, மூன்றாம் பாலினத் தடை என்பதெல்லாம் முதலாளித்துவ ஆணாதிக்க சிந்தனைதான்.

தேர்தல் பரப்புரையிலேயே இதெல்லாம் வெளிப்பட்டது. அதனால் இவர் அதிபராக வந்தால், எங்களுக்கு எதிராகச் செயற்படுவார் என்பதெல்லாம் எதிர்பார்த்ததுதான். முந்தைய ஆட்சியின்போதே இராணுவத்திலிருந்து மூன்றாம் பாலினத்தவரைத் தடை செய்தார். இப்போது விளையாட்டிலிருந்து தடை செய்திருக்கிறார். நான் கடந்த வருடம் அமெரிக்கா சென்றபோது, அங்கிருக்கும் கொள்கைகளை ஆய்வு செய்தேன். அப்போதே சில மாகாணங்களில் 18 வயதுக்குக் கீழே இருப்பவர்கள் பாலின மருந்து எடுத்துக்கொள்வதைத் தடை செய்திருந்தார்கள். இப்போது அதை அனைத்து மாகாணத்திற்கும் விரிவுபடுத்தியிருக்கிறார்கள்.

தற்போது அங்கிருக்கும் போராளிகள் ட்ரம்பின் இந்த முடிவை வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். அடுத்த கட்டமாக உச்ச நீதிமன்றத்தை நாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். WHO மூன்றாம் பாலினம் என்பது நோயல்ல என அறிவித்திருந்தது. அதை ஏற்றுக்கொண்டு பல்வேறு நாடுகள் மூன்றாம் பாலினத்தவர்களுக்கான உரிமைகளைக் கொடுக்கத்தொடங்கினார்கள். தற்போது றுஉழு-விலிருந்து அமெரிக்கா வெளியே வந்திருப்பதால், றுஉழு முடிவுகளை, ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்ப் பிபபதில் சிக்கல் இருக்கிறது. எனவே, இது தொடர்பாக வேறு ஆதாரங்களைத் திரட்ட வேண்டிய சூழல் இருக்கிறது. அமெரிக்காவின் இந்த முடிவை முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டு மற்ற நாடுகளும் இதைச் செயற்படுத்துமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. 18 வயதுக்குக் கீழ் இருக்கும் மூன்றாம் பாலினக் குழந்தைகளைப் பாதுகாக்கும் சூழலைதான் தற்போது உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்" என்கிறார் கவலையுடன்.

# குடியுரிமை பிறப்புரிமை.. சட்டத்தை மீறிய டிரம்ப் உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்த நீதிமன்றம்!



குடியுரிமை பிறப்புரிமை சட்டத்தை மீறிய டிரம்ப் உத்தரவுக்கு நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற டிரம்ப் கடந்த திங்கள்கிழமை பதவியேற்றார். அவர் பதவியேற்றவுடன் பல்வேறு அதிரடி உத்தரவுகளில் கை-யெழுத்திட்டார்.

குறிப்பாக அமெரிக்க குடியுரிமை பெறாத பெற்றோருக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த பிறப்பின் அடிப்படையிலான குடியுரிமையை அதிபர் டொனால்டு டிரம்ப் இரத்து செய்தார்.

இந்த உத்தரவு பெப்ரவரி 19 முதல் நடைமுறைக்கு வரும் என்று தெரிவி-க்கப்பட்டது. இதற்கு எதிராக வாஷிங்டன், அரிசோனா, இலினாயிஸ் மற்றும் ஓரிகான் உள்ளிட்ட 22 ஜனநாயக கட்சி தலைமை வகிக்கும் மாகாண நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டன.

இந்நிலையில் டிரம்பின் உத்தரவுக்கு வாஷிங்டன் நீதிமன்றம் இடைக்கால தடை பிறப்பித்துள்ளது.

மேலும் அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணான அதிபரின் உத்தரவை அமுல்படுத்த வேண்டாம் என்றும் அமெரிக்க அரசுக்கு அறிவுறுத்தி உள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த அதிபர் டிரம்ப் நீதிமன்ற உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்யப் போவதாக அறிவித்துள்ளார்.

# மியான்மரில் நிலநடுக்கம்!



மியான்மரில் நைபிடால் எனும் இடத்தில் இன்று அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் 4.8 ரிக்டர் அளவில் பதிவானது என தேசிய நில அதிர்வு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விவரங்கள் இன்னும் வெளியாகவில்லை.



# உலக சுகாதார அமைப்பில் இருந்து அமெரிக்கா விலகும் திகதி அறிவிப்பு!




2026 ஆம் ஆண்டு உலக சுகாதார அமைப்பில் இருந்து அமெரிக்கா விலகுவதாக உத்தியோபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்று மற்றும் இதர சர்வதேச சுகாதார நெருக்கடிகளை தவறாக கையாண்டதாக உலக சுதாதார அமைப்பை குற்றம்சாட்டிய டொனால்டு டிரம்ப், அமைப்பில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து உலக சுகாதார அமைப்பில் இருந்து 2026-ம் ஆண்டு அமெரிக்கா ஜனவரி 22-ஆம் திகதி வெளியேறும் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இரண்டாவது முறையாக அமெரிக்க அதிபராக வெற்றிபெற்ற டொனால்டு டிரம்ப், பதவியேற்ற சில மணி நேரங்களில் உலக சுகாதார அமைப்பில் இருந்து அமெரிக்கா விலகுவதாக அறிவித்தார். இது குறித்து கருத்து தெரிவித்த உலக சுகாதார அமைப்பு, முக்கிய நன்கொடையாளரின் நடவடிக்கை வருத்தம் அளிப்பதாக தெரிவித்தது.

உலக சுகாதார அமைப்பில் இருந்து விலகும் முன்பு கிட்டத்தட்ட ஓராண்டுக்கு முன்கூட்டியே தகவல் அறிவிக்க வேண்டும். இதோடு 1948 அமெரிக்க சட்டசபை கூட்டுத் தீர்மானத்தின் கீழ் வாஷிங்டனின் நிலுவை தொகையை செலுத்த வேண்டும்.

ஜெனிவாவை தலைமையிடமாக கொண்டு இயங்கும் உலக சுகாதார அமைப்புக்கு அமெ-ரிக்கா மிகப்பெரிய நிதி பங்களிப்பை வழங்குகிறது.

ஒட்டுமொத்த நிதியில் இருந்து சுமார் 18 சதவீத தொகையை அமெரிக்கா உலக சுகாதார மையத்திற்கு வழங்குகிறது.

# சூடானில் வன்முறை: சமூக ஊடகங்களுக்கு தற்காலிக தடை!

சூடானில் ஜூபா எனும் இடத்தில் வெடி-த்த வன்முறை சம்பவத்தினைத் தொடர்ந்து அங்குள்ள சமூகஊடகங்களுக்கு சூடான் அரசு தற்காலிகமாக தடை விதித்துள்ளது.

சூடான் நாட்டில் இராணுவ ஆட்சி நடை-பெற்று வருகிறது. அதனை எதிர்த்து துணை இராணுவத்தினர் போராடி வருகிறார்கள். இதனால் இருதரப்புக்கும் இடையே மோதல் போக்கு ஏற்பட்டு உள்நாட்டு கலவரமாக வெ-டித்துள்ளது. இதில் அப்பாவி பொதுமக்கள் ஆயிரக்கணக்கானோர் பலியாகி வருகின்ற-னர். இதற்கிடையே, கெசிரா மாநிலத்தில் தெற்கு சூடானின் போராளி குழுக்களால் கொலைகள் நடப்பதாக கூறும் சூடானின் காட்சிகளால் அப்பகுதி மக்கள் கோபமடைந்-துள்ளனர். இதனால் தெற்கு சூடானில் உள்ள சூடானிய வர்த்தகர்களுக்கு சொந்தமான கடைகள் சூறையாடப்பட்டன. தெற்கு சூடானில் கடந்த 17ஆம் திகதி ஊரடங்கு உத்-தரவை அதிகாரிகள் விதித்தனர்.

இந்நிலையில், அண்டை நாடான சூடானில் வன்முறை தொடர்பாக சமூக ஊடகங்களு-க்கு தற்காலிக தடை விதித்து தெற்கு சூடான் உத்தரவிட்டுள்ளது.

பொதுமக்களைப் பாதுகாக்க இந்த நடவடிக்கை அவசியம்என வலியுறுத்திய தேசிய தொடர்பு ஆணையம், தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு அனுப்பிய உத்தரவின்படி 90 நாள் வரை நீட்டிக்கக் கூடிய தற்காலிக தடை இன்று நள்ளிரவு முதல் அமலுக்கு வரும் என்றும், நிலைமை கட்டுக்குள் வந்-தவுடன் இந்த உத்தரவு நீக்கப்படலாம்எனவும் தெரிவித்துள்ளது.

## யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் மூலம், யாழ்ப்பாணத்தில் கடந்த ஒருவார காலமாகப் பேசுபொருளாக மாறியிருந்த பெயர் மாற்ற சர்ச்சை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

கடந்த 18 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையம் என்று பயன்படுத்தப்பட்ட இந்தக் கட்டடத் தொகுதி கடந்த 18 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா, இலங்கையின் புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலவல்கள் பிரதி அமைச்சர் மற்றும் கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சர் ஆகியோரின் முன்னிலையில் "திருவள்ளுவர் கலாசார மையம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, பெயர்ப் பலகை திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இதனையடுத்து, இந்தப் பெயர் மாற்ற பலத்த விமர்சனத்துக்குள்ளாகியது. அரசியல்வாதிகள் உட்படப் பலர் இதற்கு எதிராகக் கருத்துக்களை முன்வைத்தனர். சமூக ஊடகங்களில் பலமான எதிர்ப்புகள் பல பதிவு செய்யப்பட்டன.

இந்நிலையில், திருவள்ளுவர் கலாசார மையத்தின் முன் நுழைவாயிலில் இன்று காலை "யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம்" எனப் பெயரிடப்பட்டு, புதிய பெயர்ப்பலகை பொருத்தப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

## மண்வெட்டியால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் இறுதியில் மோதலாக மாறியுள்ளது.

இதன்போது அண்ணன் மீது தம்பிகளில் ஒருவர் மண்வெட்டியால் வெட்டியுள்ளார்.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த அண்ணன் அயலவர்களால் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான 39 வயது நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

அவரின் சடலம் கரந்தெனிய வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், உயிரிழந்தவர்களின் இரண்டு தம்பிகளையும் கைது செய்துள்ளனர்.

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த சுந்தரலிங்கம் சுகந்தன் (வயது 28) எனும் இளம் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்

உயிரிழந்த நபர் கடந்த தீபாவளி தினத்தன்று தனது மாமியார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் மாமியார் படுகாயமடைந்திருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் இருந்து தற்போது பிணையில் விடுக்கப்பட்டுள்ளார்

இந்நிலையில், நேற்று இரவு தனது மோட்டார் சைக்கிளில் வீடு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த வேளை அவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள ஈச்சங்குளம் பொலிஸார் உயிரிழந்தவரின் மைத்துனரைக் கைது செய்துள்ளனர்.

தாயார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதற்குப் பழிவாங்கும் நோக்குடன் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனும் சந்தேகத்தில் பொலிஸார், துப்பாக்கி பிரயோகத்துக்கு இலக்கான பெண்ணின் மகனைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவ ஒன்றியப் பிரதிநிதிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் மாணவர்கள் தெரிவிக்கையில்,

"கடந்த மே மாதம் விஞ்ஞான பீட மாணவர்களின் கற்றல் மண்டபத்தில் மாணவர்கள் கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை, மாணவர்களை மண்டபத்தினுள் வைத்து விரிவுரையாளர் ஒருவர் பூட்டிய போது விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத் தலைவர் மண்டபக் கதவைத் திறந்து மாணவர்களை வெளியேற்றி இருந்தார். கதவைப் பூட்டை உடைத்தே திறந்ததாக குற்றஞ்சாட்டி அவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டது

அதுபோன்று பல்கலைக்கழகத்தினுள் இருந்த ஐந்து கல்லாசனங்களை உடைத்து எறிந்தமை தொடர்பில் கலைப்பீட பீடாதிபதியிடம் கேள்வி எழுப்பிய மாணவர்கள் ஐவருக்கும் வகுப்புத் தடை விதிக்கப்பட்டது.

அதேவேளை, புதுமுக மாணவர்கள் தமது வட்ஸ் அப் குழுவில் பல்கலைக்கழகத்தில் தாம் விரும்பும் பாடங்களை கற்க அனுமதிக்க வேண்டும் எனக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்றும், கோரிக்கையை ஏற்கத் தவறினால் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என அவர்களின் குழுவில் கலந்துரையாடியுள்ளனர்.

அவ்வாறு கலந்துரையாடிய மாணவர்கள் இருவருக்கும் வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது. புதுமுக மாணவர்களுக்கான முதல் நாள் விரிவுரைகள் கடந்த திங்கட்கிழமையே ஆரம்பமாகியது. மாணவர்கள் பல்கலைக்கழகத்தினுள் கற்றல் நடவடிக்கைக்கு வர முதலே அவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக முதல் நாள் விரிவுரை என்பது மாணவர்களுக்கு முக்கியமான நாளாகும். அந்த நாளில் வகுப்புத் தடை விதிக்கப்பட்டு பல்கலைக்கழகத்தினுள் மாணவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

மாணவர்களை கற்றல் மண்டபத்தினுள் வைத்து பூட்டிய விரிவுரையாளருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கல்லாசனங்களை அடித்து உடைத்தவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பல்கலைக்கழகத்தில் விரும்பிய பாடத்தைத் தெரிவு செய்வதற்கு மாணவர்களுக்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. அவற்றை கேள்வி கேட்ட மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதித்துள்ளார்கள்.

மாணவர்களின் நலன் சார்ந்து பேச வேண்டிய பல்கலைக்கழக மூதவை சபையோ, பேரவையோ கடந்த 8 மாதங்களுக்கு மேலாகத் தொடரும் இந்த மாணவர்களின் பிரச்சினை தொடர்பில் எந்தக் கரிசனையும் கொள்ளவில்லை என்பது மாணவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதுடன், மூதவை சபை மற்றும் பேரவை ஆகியவை முடங்கியுள்ளமை வேதனையை ஏற்படுத்தியுள்ளது." - என்றனர்.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படை உரிமைகள் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் அமைச்சரவை உறுப்பினர்கள் குழு பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ தனது வழக்கறிஞர்கள் மூலம் தாக்கல் செய்த மனுவில், முறையான பாதுகாப்பு மதிப்பீடு இல்லாமல், அவரது பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட பாதுகாப்பு குழுவிலிருந்து 60 அதிகாரிகள் மட்டுமே தக்கவைக்கப்பட்டனர் என்றும், மற்ற அனைவரும் நீக்கப்பட்டனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

தற்போது தனது பாதுகாப்புக்காக ஆயுதம் ஏந்திய பாதுகாப்புப் படையினர் யாரும் பணியில் அமர்த்தப்படவில்லை என்றும், தனது பாதுகாப்புக்காக பொலிஸ் அதிகாரிகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளனர் என்றும் மஹிந்த தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக நீடித்த போரை முடிவுக்குக் கொண்டுவர வழிவகுத்த முன்னாள் ஜனாதிபதி, பயங்கரவாத அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றார்.

மேலும் அவரது உயிருக்கும் அச்சுறுத்தல் இருக்கின்றது என்றும் அவரது மனுவில் கூறப்பட்டுள்ளது.

பிரதிவாதிகள் தனது பாதுகாப்பைத் தன்னிச்சையாக நீக்கியதன் மூலம் தனது அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளதாகத் தீர்ப்பளிக்குமாறு மஹிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

கூடுதலாக, தனக்கு எதிரான அச்சுறுத்தல்கள் குறித்து மதிப்பீடு செய்ய பிரதிவாதிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

மனுதாரர் மஹிந்த ராஜபக்ஷ, தனக்கு வழங்கப்பட்ட முழு பாதுகாப்புப் படையையும் திருப்பித் தருமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் உயர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

# பெண்களைத் தாக்கி தொலைபேசியை அபகரித்த இரண்டு இளைஞர்கள் கைது

வவுனியா,, ஜன 24

வவுனியா, ஓமந்தையில் பெண்களைத் தாக்கி 7 இலட்சம் பெறுமதியான தொலைபேசியைக் கொள்ளையடித்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஓமந்தை ஏ - 9 வீதியில் நேற்று மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு பெண்களைப் பின் தொடர்ந்து சென்ற இளைஞர் இருவர் குறித்த பெண்களை வழிமறித்து பெண்களைத் தாக்கியதுடன் அவர்களிடம் இருந்த 7 இலட்சம் ரூபா பெறுமதியான கையடக்க தொலைபேசியை பறிமுதல் செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண்கள் வன்னி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அவசர தொலைபேசி இலக்கமான 107 இற்குத் தொடர்பு கொண்டு முறையிட்டதை அடுத்து உடனடியாகச் செயற்பட்ட ஓமந்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயதிலக தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த இளைஞர்களை அடையாளம் கண்டு ஓமந்தை, சேமமடு பகுதியில் வைத்து துரத்திப் பிடித்துள்ளனர்.

அவர்களிடம் இருந்து குறித்த தொலைபேசியும் மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவர்கள் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்தவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# எம்.பிக்களின் உணவு கட்டணம் அதிகரிப்பு



கொழும்பு,, ஜன 24

பாராளுமன்ற உள்துறைக் குழு எடுத்த முடிவின்படி, எம்.பி.க்களின் தினசரி உணவுக் கட்டணம் 450 ரூபாயில் இருந்து 2,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று கூடிய பாராளுமன்ற உள்துறை குழு கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இத்திருத்தத்தின் மூலம் எம்.பி.யின் காலை உணவுக்கான கொடுப்பனவு ரூ.600 ஆகவும், மதிய உணவு ரூ.1,300 ஆகவும், பிற்பகல் தேநீர் ரூ.100 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த விலை திருத்தத்திற்கு முன், காலை உணவு ரூ.100, மதிய உணவு ரூ.300, மதியம் தேநீர் ரூ.50ஆக இருந்தது.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்களின் சிற்றுண்டிச்சாலையில் விருந்தினரை உபசரிப்பதற்கு மேலதிகமாக அறவிடப்படும் 275 ரூபாவை அதே போன்று பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது (ஐ)

# முன்னாள் மாகாண சபை உறுப்பினருக்கு பிணை

கொழும்பு,, ஜன 24

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சுலோச்சன கமகே உள்ளிட்ட சந்தேகநபர்கள் இருவரையும் பிணையில் விடுதலை செய்யுமாறு, கொழும்பு நீதவான் நீதிமன்றம் இன்று (24) உத்தரவிட்டுள்ளது.

வர்த்தகர் ஒருவரிடமிருந்து 90 இலட்சம் ரூபாய் இலஞ்சம் பெற்ற சம்பவம் தொடர்பில், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சுவீகரிக்கப்பட்ட காணி தொடர்பான நட்டஈட்டை விரைவாக முடிப்பதற்காக 90 இலட்சம் ரூபாய் இலஞ்சமாகப் பெறப்பட்டுள்ளது.

(ஐ)







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.01.2025 இல் வெளியிடப்பெற்றது.